பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 17 புதன்கிழமை 31.01.2024 கதிர் 85

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி அடிக்கடி வெளிநாடு செல்வதாக கடந்த வாரம் எதிர்க்கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்தன. எதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாசமற்றும்ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரும், ஜனாதிபதி பதவியை ஏற்றதன் பின்னர் கடந்த 17 மாதங்களில் 18 வெளிநாட்டுப் பயணங்களைமேற்கொண்டுள்ளதாக நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கூறினர். இந்தச் செலவுகள் மற்றும் ஜனாதிபதியின் ஏனைய செலவினங்களுக்காக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு அப்பால் 2000 இலட்சம் ரூபாவை ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார் என்று அனுரகுமார மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். ஜனாதிபதி வெளிநாட்டில் இருந்த போது, ☞2

ஆளும் தரப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# கொழும்பில் திரண்ட மக்கள் மீது புகைக் குண்டு, நீர்த் தாரை தாக்கு

முன்னாள் எம்.பி. உட்படப் பலர் வைத்தியசாலையில்







**வற்வரி அதிகரிப்பு, நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவற்றை எதிர்த்து ஆளும் தரப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நேற்று நடத்திய பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸார் கண்ணீர்** ☞2

சுதந்திரதின ஒத்திகையில்

## பரசூட்கள் மோதி இருவருக்கு காயம்

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட்டங்களுக்கான ஒத்திகையின்போது பரசூட்கள் இரண்டு மோதி வித்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

பெப்ரவரி4சுதந்திரதினநிகழ்வுகளை நடத்த காலிமுகத்திடலில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

காலி முகத்திடல் வீதியின் ஊடான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டு கடந்த 30ஆம் திகதி முதல் ஒத்திகை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

சுதந்திரன தின நிகழ்வுகளில் இராணுவம், கடற்படை, விமானப் படையென முப்படைகளின் அணிவகுப்புகளும் இடம்பெறுவது வழக்கம். விமானப்படையின் சாகசங்களும், இராணுவ மற்றும் விமானப் படையினரின் சாகசங்களும் இடம்பெறும்.

இதற்காக இடம்பெற்றுவரும் சுதந்திரன ஒத்திகையில் பங்குபற்றிய நான்கு பரசூட் படையினர் விபத்தில் சிக்கியுள்ளனர்.

இவர்கள் நடுவானில் ☞2

மக்கள் வெள்ளத்தைப் பார்த்து பயந்துவிட்டனர்

## இது ஒரு கோழத்தனமான ஆட்சி முதுகெலும்பற்ற ஆட்சியாளர்கள்

பேரணி இறுதியில் சஜித் காட்டம்

ரணில் - ராஜபக்ச ஆட்சியாளர்கள் மக்கள் வெள்ளத்தைப் பார்த்துப் பயந்து விட்டனர். இது கோழைத்தனமான ஆட்சி. முதுகெலும்பு இல்லாத ஆட்சியாளர்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நேற்றுக் கொழும்பில் நடந்த பெரும் எதிர்ப்புப் பேரணியின் இறுதியில், கொழும்பு விகாரமகாதேவி பூங்கா பிரதான நுழைவாயில் முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றியபோ-து இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றம் தடையுத்தரவுபிறப்பித்தபாதைகளில் நாங்கள் பேரணி நடத்தவில்லை. நாம் சட்டத்தை மீறி செயற்படவில்லை. வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம், எங்களுக்குத் தேர்தலே வேண்டும்.

அரசியல் ரீதியிலான டீல்கள் மூலம் அன்றி மக்கள்அனுமதியுடனயே ஆட்சிக்கு வருவோம். மக்கள் ஆசிர்வாத்தின் ஊடாகவேநாம்ஆட்சிக்கு வருவோம் என்பதை இந்த ரணில் - ராஜபக்ச ஆட்சியாளர்களிடம் தெளிவாகக்கூறுகிறோம்.

ரணில் - ராஜபக்ச ஆட்சியாளர்கள் மக்கள் வெள்ளத்தைப் பார்த்துப் பயந்து ☞8

போர்க் குற்றங்களுக்கான

## பொறுப்புக்கூறலில் இருந்து ஐ.ம.சக்தியும் விலகுகின்றது

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் குற்றச்சாட்டு

இலங்கையில்நடந்த போரில் இடம்பெற்ற குற்றங்களுக்குப்பொறுப்புக்கூறுவதி லிருந்து ஐக்கிய மக்கள் சக்தியும் விலகிச் செல்கின்றதுஎன்றுகுற்றஞ்சாட்டியிருக்கிறார் மனித உரிமைகள் செயற்பாட்டாளரான அம்பிகா சற்குணநாதன்.

இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம் பெற்றதை மறுக்கும் ஒருவரை ஆலோசகராக ஐக்கிய மக்கள் சக்தி நியமித்துள்ளமை அவர் கடுமையாக ☞2

## பாதுகாப்பு அமைச்சு அனுமதித்ததும் சாந்தன் இலங்கைக்குத் திரும்புவார்

இந்திய தூதரக அதிகாரி சிறீதரனுக்கு தெரிவிப்பு

இலங்கைப்பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் உடல்நலம்குன்றியுள்ள சாந்தனை இலங்கைக்கு அனுப்ப உரிய நடவடிக்கைஎடுக்கப்படும்என இந்திய தூதரக அதிகாரி தன்னிடம்தெரிவித்ததாக பாராளுமன்றஉறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளி என்று தண்டனை விதிக்கப் பட்டவரானசாந்தன்தண்டனைக் காலம் முடிவடைந்து, நீதிமன்றத்தால்பிணையில் ☞12

## கத்திக் குத்தில் முடிந்த வாய்த்தர்க்கம் சுன்னாகத்தில் இளைஞர் உயிரிழப்பு

சுன்னாகத்தில் கத்தியால் குத்தப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இருவரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி கத்திக் குத்தில் முடிந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டம், சுன்னாகத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் கந்தரோடைப்பகுதியைச் சேர்ந்த சந்திரநாதன் கோபிராஜ் என்கிற 36 வயதான நபர் உயிரிழந்துள்ளார்.

இருவருக்கு இன்னொருவருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் கத்திக்குத்து இடம்பெற்றது என்கின்றனர் பொலிஸார். கத்திக் குத்தில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார்.

கோபிராஜ்ஜை கத்தியால் குத்தியவர் என்கிற சந்தேகத்தில் கந்தரோடையைச் ☞2

## துப்பாக்கிகள், வாள்களுடன் களுத்துறையில் இருவர் கைது

கொலை முயற்சிக்குச் சென்றோராம்

துப்பாக்கிள், வாள்களுடன் காரில் சென்றுகொண்டிருந்த இருவரைத்தாம்கைதுசெய்துள்ளனர் என்று களுத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். கொலை முயற்சிக்காகச் சென்றுகொண்டிருந்த சமயம் இவர்கள் இருவரையும் தாம் கைது செய்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

46 மற்றும் 29 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து28தோட்டாக்கள், 2 வாள்கள், 2 கைக்குண்டுகள், 11 கிராம் ஹெரோயின், துப்பாக்கி,கார் என்பனபொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட ☞2

## சமஷ்டித் தீர்வு தருகிறோம் என்று கூறி தமிழரைப் போராட அழைக்கக்கூடாது

ஜேவிபி தலைவர் அனுரகுமார உறுதி

சமஷ்டி தருகின்றோம், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைத் தருகின்றோம்என்றுகூறி தமிழ் மக்களை தேசிய போராட்டத்தில் இணைக்கக்கூடாது. பதிலாக பேரிடரில் இருந்து மீள்வதற்கான போராட்டத்தில்இணைய வருமாறே அவர்களை அழைக்கவேண்டும் என்று ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்கதெரிவித்தார்.

ஓய்வுபெற்றமுப்படை அதிகாரிகளின்மாத்தறை மாவட்ட மாநாட்டில் ஞாயிற்றுக்கிழமை கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர்இதனைத்தெரிவித்தார்.

சமஷ்டியை ☞8

## இனி இது .....

சுவிட்சர்லாந்து மற்றும் உகண்டா ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்த வேளையில் பாராளுமன்றத்தில் இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

ஜனாதிபதியின் 19 ஆவது வெளிநாட்டுப் பயணம் விரைவில் தொடங்கவுள்ளது. இந்தப் பயணம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவுள்ளார். ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் பெப்ரவரி 9 தொடங்கவுள்ள காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்க அவர் திட்டமிட்டுள்ளார்.

.......................

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான விடயம் அரசியல் களத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகின்ற நிலையில் சந்திரிகா தலைமையிலான புதிய கூட்டுத் தொடர்பில் நேற்று இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் வெற்றிபெறச் செய்யும் நோக்கோடுதான் அவர் களத்தில் குதித்துள்ளார் என்று ஒரு செய்தி வருகின்றது.

அதன்படி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவைப் பெற்று ரணிலை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைக்க சந்திரிகா முதலில் முயற்சித்தார். சந்திரிகா தனக்கு நெருக்கமான மஹிந்த அமரவீரவைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தார். ஆனால் உள்ளிருந்து பலத்த எதிர்ப்பு எழுந்ததை யடுத்து இந்த நடவடிக்கையை சந்திரிக்கா கைவிட வேண்டிய தாயிற்று.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் ஊடாக ரணிலுக்கு ஆதரவளிப் பதற்கான களத்தை தயாரிப்பதே சந்திரிகாவின் அடுத்த திட்டமாக இருந்ததாம். அதற்காக கடந்த வாரம் இடைத்தரகர் ஊடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிக்கு தொடர்பேசனைகளை அனுப்ப சந்திரிகா நடவடிக்கை எடுத்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணைவதற்குத் தான் தயாராக இருக்கிறார் எனவும், அதற்காக கட்சியின் தலைவர் பதவி மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் தனக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் சந்திரிகா மைத்திரியிடம் தெரிவித்திருந்தாராம். ஆனால் மைத்திரி அதற்கு இணங்கவில்லை. பதிலாக புதிய கூட்டணி ஒன்றை சுதந்திரக் கட்சி தலைமையில் அமைத்து அதற்கு தலைவராகுங்கள் என்று சந்திரிக்காவை கட்சியிலிருந்து தள்ளி வைத்துவிட்டார் மைத்திரி.

...........................

தற்போது ரணிலை மையப்படுத்தி மொட்டுக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. பிரசன்ன ரணதுங்க மற்றும் திலும் அமுனுகம போன்ற செல்வாக்கு மிக்கவர்கள் ரணிலுக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு பகிரங்கமாக வாதிட்டு வருகின்றனர். எவ்வாறாயினும், தற்போது அமெரிக்காவில் வசிக்கும் மொட்டுக் கட்சியின் முக்கிய வியூக வாதியான பசில், ரணிலின் ஜனாதிபதி வேட்புமனுவை தீர்மானிக்க மார்ச் மாதம் வரை கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று முன்மொழிகிறார். ரணிலின் முடிவு உறுதியான பின்னரே மொட்டுவின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறு பசில் பரிந்துரைக்கிறார்.

பசில் இல்லாத காலத்தில், மஹிந்தவை முக்கிய பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, மொட்டுவின் ஜனாதிபதி வேட்பாளராக ரணிலை நியமிக்கும் பிரேரணையை முன்வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பசில் இல்லாத நிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும், பல்வேறு குடும்பத் தொடர்புகள் ஊடாக மஹிந்த மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. வெற்றியடையும் பட்சத்தில் பசில் இலங்கை திரும்புவதற்கு முன்னர் கூட்டத்தைக் கூட்டி ரணிலை மொட்டுவின் வேட்பாளராக அறிவிப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதே இக்குழுவின் நோக்கமாகும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## கத்திக் குத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த மற்றொருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பொறுப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சித்துள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியும் போரில் முக்கிய பணியாற்றியவருமான ஜெனரல் தயா ரத்நாயக்க திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார். அவருக்கு கட்சியின் பொதுக் கொள்கைகள் தொடர்பான மூத்த ஆலோசகர் என்கிற பதவி வழங்கப்பட்டது.

'ஐக்கிய மக்கள் சக்தி போர்க் குற்றங்கள் இடம்பெற்றதை மறுக்கும் ஒருவரை ஆலோசகராக நியமித்துள்ளதுடன், அந்தப் போரைக் குறிக்க மனிதாபிமான நடவடிக்கை என்ற பதத்தை பயன்படுத்தியிருப்பது இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை எனவும் எவரையும் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்த வேண்டியதில்லை எனவும் அந்த கட்சி கருதுவதை வெளிப்படுத்தியுள்ளது .

தென்னிலங்கையின் அனைத்து கட்சிகளும் இந்த விடயத்தில் ஒரே மாதிரியான நிலைப்பாட்டை கொண்டுள்ளன" என அவர் தமது எக்ஸ் வலைத்தளத்தில் தெரிவித்தார்.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகைக் குண்டு மற்றும் நீர்த் தாரைத் தாக்குதல்களை நடத்தினர். இதில் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உட்பட பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸார் சிலரும் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"மாற்றத்தை ஏற்படுத்தும் வருடம் - 2024" எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி இந்தப் போராட்டத்தை நடத்தியது. ஆளும் தரப்பின் புதிய வரிக் கொள்கை, ஜனநாயகத்துக்கு விரோதமான சட்டங்கள், மக்களின் வாழ்க்கை செலவை குறைக்க நடவடிக்கையெடுக்காமை, முறையற்ற பொருளாதார கொள்கை உட்பட பல்வேறு விடயங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தே ஐக்கிய மக்கள் சக்தி இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியது.

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு பேரணியில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கட்சியின் ஆதரவாளர்கள் பல ஆயிரக்கணக்கானோர் கொழும்பிற்கு வருகை தந்தனர். வற் வரியைக் குறை, மக்கள் விரோத சட்டங்களை நீக்கு, பொருளாதார குற்றவாளிகளைத் தண்டனைக்குட்படுத்து ஆகிய முழக்கங்களை எழுப்பியபடி தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் சுலோக அட்டைகளையும் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

கொழும்பு விகாரமகாதேவி பூங்கா அருகில் இருந்து எதிர்ப்பு பேரணி தொடங்கியது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமை தாங்கினார். பேரணி நகரத் தொடங்கிய 15 நிமிடங்களுக்குள்ளே போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும் நீர்த்தாரையைப் பீச்சியடித்தும் பொலிஸார் தாக்குதல் நடத்தினர்.

இதனால் அங்கிருந்து கலைந்த போராட்டக்காரர்கள் மீண்டும் விகாரமாதேவி பூங்கா முன்பாக ஒன்றுதிரண்டனர். சஜித் பிரேமதாச அங்கு உரை நிகழ்த்தினார்.

முன்னதாக, எதிர்க்கட்சியினரின் இந்தப் போராட்டத்திற்கு எதிராக மூன்று நீதிவான் மன்றங்களில் பொலிஸார் தடை உத்தரவுகளைப் பெற்றிருந்தனர். போராட்டம் கொழும்பு நகர வீதிகளுக்குள் நுழைந்தால் பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் என்று தெரிவித்தே இந்தத் தடை உத்தரவுகள் பெற்றப்பட்டிருந்தன.

கொழும்பு இலக்கம் 04 நீதிவான் மன்றம், கோட்டை நீதிவான் மன்றம், மாளிகாகந்த நீதிவான் மன்றம் ஆகிய மூன்று இடங்களிலும் பொலிஸார் பேரணிக்கு எதிரான தடை உத்தரவுகளைப் பெற்றிருந்தனர்.

பேரணியில் ஈடுபடுவோர் வீதி போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்படக்கூடாது எனவும் நிதியமைச்சு, ஜனாதிபதி செயலகம், மத்திய வங்கி மற்றும் ஜனாதிபதி மாளிகை ஆகியன அமைந்துள்ள வீதிகளுக்குள் நுழைவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு சேதமேற்படுத்தக் கூடாது எனவும் நீதிமன்ற உத்தரவுகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. டீன்ஸ் வீதி, லிப்டன் ரவுண்டானா, ஓல்கொட் மாவத்தை, டெக்னிக்கல் சந்தி, மருதானை சந்தி, ரி.பி.ஜயா மாவத்தை, வழியாக பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் நடத்திய கண்ணீர் புகைக்குண்டு மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல்களினால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச் செயலாளருமான முஜிபுர் ரஹ்மான் உட்படப் பலர் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை தாக்குதலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பேரணியை தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்த்து நலன் விசாரித்தார்.

இந்தப் போராட்டத்தின்போது தமது ஆதரவாளர்கள் 5 பேர் காயமடைந்தனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் மத்தும பண்டார தெரிவித்தார். எனினும் ஒருவர் மட்டுமே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் போராட்டத்தில் பொலிஸார் சிலரும் காயமடைந்தனர் என்று பொலிஸ் பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்தார்.

கொழும்பு, பொது நூலகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்ட பேரணியை கலைக்கும் முயற்சியில் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்ட போது போராட்டக்காரர் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. அவரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

## துப்பாக்கிகள்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை நடவடிக்கையில் 5 வாள்கள், 2 துப்பாக்கிகள் என்பன கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# அரசியல் புரட்சியை ஏற்படுத்துவதற்காக பரந்துபட்ட கூட்டணி அமைக்க ஏற்பாடு

## சம்பிக்க ரணவக்க வியூகம்

நாட்டில் அரசியல் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் தரம்மிக்க குழுவினருடன் பரந்துபட்ட அரசியல் கூட்டணி அமைக்க கலந்துரையாடி வருகிறோம்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அந்த குழுவில் உள்ள பொருத்தமான ஒருவரையே வேட்பாளராகக் களமிறக்க திட்டமிட்டுள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அரசியல் ரீதியில் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டிருக்கும் நடவடிக்கை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டில் அரசியல் புரட்சி ஒன்றை ஏற்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். ஏனெனில் நாட்டை வங்குரோத்து அடையச் செய்த குழுவினரை ஜனநாயக ரீதியில் வீட்டுக்கு அனுப்ப நாட்டு மக்கள் தயாராகி உள்ளனர்.

அதனால் அரசியல் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த தகுதிவாய்ந்தவர்களுடன் பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஒன்றை அமைக்க தற்போது நாங்கள் கலந்துரையாடி வருகிறோம்.

அத்துடன் எமது பரந்துபட்ட கூட்டணியை நாடாளுமன்றத்தில் இருப்பவர்களும் நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருப்பவர்களையும் இணைத்துக்கொண்டு கூட்டணி ஒன்றை எதிர்வரும் காலத்தில் கட்டியெழுப்புவோம்.

இந்த கூட்டணியில் இருக்கும் மிகவும் பொருத்தமான வேட்பாளரை நாங்கள் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம். அதேபோன்று பொருத்தமான வேட்பாளர் குழுவொன்றை நாடாளுமன்ற தேர்தலுக்கு நாங்கள் முன்வைப்போம்.

அத்துடன் மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து வருகின்றனர். அரசாங்கம் பாரியளவிலான வரி சுமையை மக்கள் மீது சுமத்தி இருக்கிறது.

எந்தவித தேடிப்பார்ப்பும் இல்லாமலும் முறையான திட்டமிடல் இல்லாமலும் டின் இலக்கம் ஒன்றின் ஊடாக மக்களை வரி முறைமைக்கு உள்வாங்கிக்கொண்டிருக்கிறது.

மேலும் அரசாங்கம் கடந்த வாரம் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் அனுமதித்துக்கொண்டது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக அதிக சந்தர்ப்பம் இருப்பது இணையவழி சேவை எனும் டிஜிற்றல் சேவை மூலமாகும். சமூக வளைத்தளங்களை ஒழுங்குபடுத்தப்போவதாக தெரிவித்து, அரசாங்கம் நாட்டுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் மரண அடியை வழங்கி இருக்கிறது.

சமூகவலைத்தளம் ஊடாக சேறுபூசும் நடவடிக்கைகள் இடம்பெறுவது உண்மை என்றாலும் அதனை மேற்கொள்ள வழிவகுத்த பிரிவினரே சட்ட திட்டங்களைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இணையவழி சேவை வழங்கும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளாமல் அரசாங்கம் நினைத்த பிரகாரம் சட்ட திட்டங்களை கொண்டுவந்துள்ளதால் இணையவழி நேவை வழங்கும் நிறுவனங்கள் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

முழு உலகிலும் இணையவழி சேவைகளில் வரி அறவிடப்படுவது 6 நாடுகளிலாகும். அதில் இலங்கையும் ஒன்றாகும்.

அத்துடன் தற்போது அமுலில் உள்ள பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை துஷ்பிரயோகம் செய்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கைதுசெய்வதற்கு அரசியல் குண்டர்கள் செயற்பட்டன நிலையில், எதிர்வரும் காலத்தில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் அனுமதித்துக்கொண்டு, அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாக இருப்பது அரசாங்கத்துக்கு எதிரான தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சாதாரண மக்களை அடக்குவதாகும். - என்றார். (05)

# நிகழ்நிலை காப்புச்சட்ட மூலத்தால் சீனா போன்ற நிலை இங்கும் வரும்

## ஹிருணிகா சுட்டிக்காட்டு



நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிர்ப்பினைத் தெரிவித்து சமூக வலைத்தள நிறுவனங்கள், கூகுள் மற்றும் யாஹூ போன்ற நிறுவனங்கள் இலங்கைக்கு சேவை வழங்குவதிலிருந்து விலகினால் சீனாவைப் போன்ற நிலைமையே எமக்கும் ஏற்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்து சமூக வலைத்தள நிறுவனங்கள், கூகுள் மற்றும் யாஹூ போன்ற நிறுவனங்கள் இலங்கைக்கு சேவை வழங்குவதிலிருந்து விலகினால் என்னவாகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். சீனாவைப் போன்ற நிலைமையே இலங்கையிலும் ஏற்படவுள்ளது.

எனவே இளைஞர்கள் இதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். எதிர்காலத்தில் இளம் தலைமுறையினர் இதனால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும். சமூக வலைத்தளங்கள் தொடர்பில் ஏற்கனவே நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டமே போதுமானது. எனவே புதிதாக எந்த சட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையில்லை.

விஷ்வ புத்த உட்பட மதங்களை நிந்தித்ததாகக் கூறி கைது செய்யப்பட்டவர்கள் பைத்தியக்காரர்களாவர். எனவே அவர்களுக்கு பிரதான ஊடகங்கள் முக்கியத்துவமளித்தமை தேவைற்ற ஒரு விடயமாகும். இவை அனைத்தும் அரசாங்கத்தின் திட்டத்துக்கமைய அரங்கேற்றப்படும் நாடகமாகும்.

அண்மையில் நிமல் லன்சா உள்ளிட்ட குழுவினர் ரணிலுக்கான பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் இடம்பெறும் என இதனை அடிப்படையாகக் கொண்டு ஊகிக்க முடியும். இலங்கையானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பழைய அங்கத்துவ நாடாகும். அவ்வாறிருக்கையில் யுக்திய சுற்றிவளைப்புக்களை நிறுத்துமாறு ஐ.நா. விடுத்துள்ள கோரிக்கையை கவனத்தில் கொள்ளத் தேவையில்லை என்று அமைச்சர் டிரான் அலஸ் கூறுகின்றார். இவ்வாறு முட்டாள்தனமாக பேசும் இவர்களை தும்புத்தடியால் அடித்து துறத்த வேண்டும். - என்றார். (05)

# அரசியல் இலாபத்திற்காகவே நிகழ்நிலை சட்டம் பயன்படும்

## ரஞ்சித் மத்தும பண்டார எச்சரிக்கை



தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் இணையப்பாதுகாப்புச் சட்டத்தை அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தக்கூடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் புதிய சட்டங்களை கொண்டுவருகிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக, நீதிமன்ற அனுமதியின்றி ஒருவரை தடுத்து வைக்க முடியும்.

நீதிமன்றத்துக்கு இருக்கும் அதிகாரம், இந்தச் சட்டத்தின் ஊடாக பதில் பொலிஸ் மா அதிபருக்கு செல்லும்.

தீர்மானிக்கும் அதிகாரம் பாதுகாப்புச்செயலாளருக்கு சென்றுவிடும்.

பாதுகாப்புச் செயலாளர் என்பவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் அதிகாரியாவார்.

எனவே, தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் இந்தச்சட்டத்தை அரசியல் இலாபத்திற்காக இவர்கள் பயன்படுத்தக்கூடும்.

இதனை பயன்படுத்தி மக்களை இவர்கள் ஒடுக்குவார்கள். அதேபோன்றுதான், இணையப் பாதுகாப்புச் சட்டமூலத்தையும் இவர்கள் கொண்டுவந்துள்ளார்கள்.

இதன் ஊடாக ஐவர் அடங்கிய ஆணைக்குழுவொன்று ஜனாதிபதியால் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழு எவ்வாறு சுயாதீனமாக இயங்கும்? ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவும் அரசியல் குழுவாகத்தான் செயற்படும். - என ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்தார். (05)

# புதிய பிரதி பொலிஸ் மா அதிபர் யாழ்ப்பாணத்தில் பதவியேற்றார்



யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க திங்கட்கிழமை பதவியேற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் அவர் தன் கடமைகளை பொறுப்பேற்றார்.

இதன்போது சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் கலந்துகொண்டனர்.

இதுவரை காலமும் கடமையாற்றிய மஞ்சள செனரத் பதவி உயர்வு பெற்று சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பாடகி பவதாரணிக்கு கொழும்பில் அஞ்சலி



மறைந்த பிரபல தென்னிந்திய பாடகியும், இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளுமான பவதாரணிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது.

'இலங்கை தமிழ் கலைஞர்கள் மன்றத்தினால்' ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வானது, இசையமைப்பாளர் ஸ்ருதி பிரபா தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் போது பவதாரணியின் உருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலைஞர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆபத்தான தடத்துக்கு மாறும் பாதைகள்

ஐக்கிய மக்கள் சக்தி தனது பொதுக் கொள்கைகள் தொடர்பான மூத்த ஆலோசகராக இலங்கை இராணுவத்தின் தளபதியாக இருந்தவரான ஜெனரல் தயா ரத்நாயக்கவை நியமித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவே இந்த நியமனத்தை நேரடியாக வழங்யுள்ளார்.

தயாரத்நாயக்கஇறுதிப்போர்க்காலத்தில்பணியாற்றிய ஓர் அதிகாரி. போர் முடிந்த பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை மறுவாழ்வு முகாம்கள் என்ற பெயரில் தடுத்து வைத்திருந்த நிலையங்களுக்குப் பணிப்பாளராகவும் இருந்தவர்.

இதற்குமுன்னர்ராஜபக்சக்களுக்குநெருக்கமானவராக இருந்தவர். கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் கைத்தொழில் அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தவர். இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராகவும் பதவி வகித்தவர். அதாவது கோட்டாபயவின் நம்பிக்கைக்குரிய தளபதிகளில் ஒருவராக இருந்தவர்.

அவரே இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளார். அவருக்கு அந்தக் கட்சியில் மூத்த ஆலோசகர்என்கிறமுக்கியபதவியும்வழங்கப்பட்டுள்ளது. இந்த நியமனம் ஒரு புறம் இருக்க, அந்த நியமனம் தொடர்பான கட்சியின் அறிவிப்பில் போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்ற இறுதிப்போரை மனிதாபிமான நடவடிக்கை என்ற பதம் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் சேர்ந்திருப்பதும் அந்தக் கட்சி போரை மனிதாபிமான நடவடிக்கை என்று குறிப்பிடுவதும் எவ்வளவு பாரதூரமானவை என்பதை மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான அம்பிகா சற்குணநாதன் இடித்துரைத்திருக்கிறார்.

“ஐக்கியமக்கள்சக்திபோர்க்குற்றங்கள்இடம்பெற்றதை மறுக்கும் ஒருவரை ஆலோசகராக நியமித்துள்ளதுடன், அந்துப்போரைக்குறிக்கமனிதாபிமானநடவடிக்கைஎன்ற பதத்தைபயன்படுத்தியிருப்பது இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை எனவும் எவரையும் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்த வேண்டியதில்லை எனவும் அந்த கட்சி கருதுவதை வெளிப்படுத்தியுள்ளது” என்று அவர் கூறுகின்றார்.

அதாவது தற்போதைய ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் மட்டுமல்ல, ஒருவேளை சஜித் பிரேமதாச ஆட்சிக்கு வந்தால்கூட தமிழர்களுக்கு எந்த நீதியும், தீர்வும் கிட்டப்போவதில்லை என்பதையே ஐக்கிய மக்கள் சக்தியின் நடவடிக்கைகள் காட்டுகின்றன.

”தென்னிலங்கையின் அனைத்து கட்சிகளும் இந்த விடயத்தில் (போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுதல்) ஒரே மாதிரியான நிலைப்பாட்டை கொண்டுள்ளன” என அம்பிகா சற்குணநாதன் மேலும் கூறுகின்றார்.

2019 அரசுத் தலைவர் தேர்தலில் பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை சஜித் பிரேமதாச தனது தேர்தல் கொள்கை அறிவிப்பில் மறைமுகமாகவேனும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இப்போது அந்த நிலைப்பாடுகளில் இருந்து விலகி சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான அரசியலை நோக்கியே அனைத்துக் கட்சிகளும் பயணிக்கின்றன என்கிற ஆபத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் நடவடிக்கை உணர்த்தியிருக்கிறது.

இந்த ஆபத்தான போக்கு இலங்கையின் எதிர்காலத்திற்கு சிறப்பானதல்ல என்பதைச் சுட்டிக்காட்டவேண்டியிருக்கின்றது. இத்தகைய போக்கு தமிழ் – சிங்கள மக்கள் மத்தியிலான இணக்கத்துக்குப் பதில் பிளவுகளையே மேலும் மேலும் வளர்த்துச் செல்லும் என்பதை அரசியல் தலைவர்கள் புரிந்து நடந்துகொள்வது அவசியம்.

# நிகழ்நிலைச் சட்டம்: சனத் நிஷாந்தவின் கனவு நனவானது!

**உபுல் யோசப் பெர்னான்டோ**



2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவின் வெற்றி குறித்து பொது ஜன பெரமுன கட்சியினர் மகிழ்ச்சியடைந்திருந்த நிலையில், மைத்திரி- ரணில் ஆளும் தரப்புக்கு எதிராக நாடு முழுவதும் மஹிந்த இயக்கத்தை வெற்றிகரமாக ஆற்றிய தீவிர மகிந்தவாதியும், பொது ஜன பெரமுனவின் அச்சமற்ற பிரதிநிதியுமான ரஞ்சித் டி சொய்சா எதிர்பாராத விதமாக மறைந்தார். இது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ராஜபக்ச தலைமையை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்காக அவர் தனது நாடாளுமன்ற வாழ்க்கையை அர்ப்பணித்திருந்ததால் அவரது மறைவு மிகவும் பொது ஜன பெரமுனவினரைப் பொறுத்தவரையில் வேதனையானது.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ராஜபக்சக்களுக்காகத் தனது உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இப்போது உயிரிழந்துள்ளார். அவர்தான் சனத் நிஷாந்தா.

சனத் நிாந்த இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் பிரபலமான பெயர். அதற்கு காரணம் அவரது ஆக்ஸிஜன் கதை. வனவிலங்கு திணைக்கள அதிகாரியான தேவானி ஜயதிலக்கவுடன் வனக் காணியை விளையாட்டு மைதானமாக மாற்றுவது தொடர்பில் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டவர். காடுகளை அழிப்பதால் உயிர் வாயு (ஒக்ஸிஜன்) இழப்பு ஏற்படும், அது பெரும் பாதிப்பு என்று கூறப்பட்டபோது, உயிர்வாயுவைச் சாப்பிட முடியாதா என்று கேட்டவர் அவர். உயிர்வாயுவைச் சாப்பிடலாமா என்று இலங்கை ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்டார் என்று சர்வதேச ஊடகங்களும் அதனைச் செய்தியாக்கின.

அந்த நேரத்தில் சமூக வலைதளங்களை அதிரவைத்த கதாபாத்திரம் அவர். உயிர்வாயுக் கதைக்காக ஒட்டுமொத்த சமூக ஊடகங்களும் அவரைக் கண்டித்தன: விமர்சித்தன. மேலும் வனவிலங்கு அதிகாரி ஹீரோவானார். 69 லட்சம் வாக்குகளுடன் ஆட்சிக்கு வந்த கோட்டாவின் ஆளும் தரப்பு எதிர்கொண்ட முதல் சமூக ஊடக குண்டு இது.

அதன் பின்னர் மீண்டும் அரங்கிற்கு வந்து காலி முகத்திடலுக்கு சென்று அரகலயவைத் தாக்கினார். அப்போதும் அவர் சமூக வலைதளங்களில் நம்பர் ஒன் இலக்காக இருந்தார். இதன் காரணமாகவே அவரை கைது செய்ய கோத்தபாய உத்தரவிட்டார்.

அதன் பின்னர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சனத் நிாந்த சமூக ஊடகத்தில் அதிகம் விமர்சிக்கப்பட்டார்.

நாமல் ராஜபக்சவின் திருமண விழாவிற்கான மின்கட்டணத்தைசெலுத்தியபின்னர்அவர்மீண்டும் சமூக ஊடகங்களின் இலக்காகிவிட்டார், மேலும் மக்கள் தங்கள் மின் கட்டணங்களை செலுத்து மாறு கேட்டு அவரது வீட்டிற்கு லைட் பில்களை அனுப்பியதாலும் அவர் சமூக ஊடகங்களில் மேலும் பிரபலமடைந்தார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மீதே தாக்குதல் நடத்தியவர் சனத் நிஷாந்த. நாட்டின் திவால்நிலைக்குக் காரணம் தொடர்பான தீர்ப்பை சஜித் நாடாளுமன்றத்தில் வாசித்தபோது, சனத் நிாந்த, முன்னெப்போதும் இல்லாத வகையில், இந்தத் தாக்குதலை நடத்தினார். சஜித்தின் கைகளில் இருந்த கோப்பு அட்டையை வலுக்கட்டாயமாக பிடுங்கினார். இது இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் எதிர்கட்சித் தலைவருக்கு இதுவரை இல்லாத அச்சுறுத்தலாக அமைந்தது.

மேலும், சமூக ஊடக தணிக்கை சட்டம் நிறைவேற்றப்பட்ட போது சபைத் தலைவர் சுசில் பிரேமஜயந்திற்கு காவலாக நின்றவர் சனத் நிாந்த. சமூக ஊடகங்களில் கவனம் பெற்ற அவர், சமூக ஊடக தணிக்கைச் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிக்க கடந்த புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டார்.

அவர் கடந்த காலங்களில் சமூக ஊடகங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்குக் கடும் எதிர்ப்புக் காட்டி வந்திருந்தார். சமூக ஊடகங்களில் அவரை குறிவைக்கும் முனைப்பு ரணிலின் யூ.என்.பி.யில் இருந்தே உருவானது. அந்தக் காலப்பகுதியில், இலங்கையில் பொதுஜன பெர முன மிகப்பெரிய சமூக ஊடக இருப்பைக் கொண்டிருந்தது. பதிலுக்கு ரணிலின் யூ.என்.பி. இந்த சக்திக்கு போட்டியாக ஒரு சமூக ஊடக படைப்பிரிவை நிறுவியது.

சனத் நிஷாந்தவின் கதை, குறிப்பாக உயிர்வாயுக் கதை ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தப் படைப் பிரிவுக்குள் பரவலாக எதிரொலித்தது. இந்தப் படை ஜனநாயகக் கொள்கைகள், பத்திரிகை சுதந்திரம் மற்றும் பிற தாராளவாதக் கண்ணோட்டங்களுக்காக அறிவுறுத்தப்பட்டிருந்தது என்பதால் அதன் தாக்கம் குறைவானதாக இருந்தது.

இந்த ஐதேக சமூக ஊடகங்கள்தான் ரணில் தாராளவாதி, அவர் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்று கூறியவர்கள். மக்களின் எழுச்சிப் போராட்டத்தின்போது கோட்டாபயவின் கீழ் ரணில் பிரதமரானபோது அதை நியாயப்படுத்தியவர்களும். ராஜபக்சக்களின் உதவியுடன் ரணில் ஜனாதிபதியானபோது, அவரைத் தாராளவாத ஜனாதிபதி என்று ஐதேக சமூக ஊடகங்கள் எழுதின.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே இந்த சமூக ஊடக அலை இலங்கையில் ஆரம்பித்தது. மகிந்த இந்த சமூக ஊடக அலையை அமெரிக்க உளவு நிறுவமான சிஐஏயின் (CIA) சதி என்று அழைத்தார், அதனாலேயே அவர் அதைத் தணிக்கை செய்யப் பயந்தார்.

2019இல் ‘சேர் ஃபெயில்’ பரப்புரையின் மூலம் சமூக ஊடகங்களின் மிகப்பெரிய இலக்காக இருந்தார் ஜனாதிபதி கோட்டா. ஆனால் அவரும் சமூக ஊடகங்களை தணிக்கை செய்யப் பயந்தார். கோட்டாவுக்கு முன் சமூக வலைதளங்களில் துரோகியாக மாறிய சனத் நிாந்த, சமூக வலைதளங்களில் தனக்கெதிரான தாக்குதல்கள் குறித்து ராஜபக்ச குடும்பத்தினரிடம் முறைப்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால் ராஜபக்சேக்கள் சமூக ஊடகங்களைத் தொட அஞ்சினார்கள்.

இறுதியாக, தாராளவாதியான ரணில் சமூக ஊடகங்களை தணிக்கை செய்வதற்கான விதிகளை அறிமுகப்படுத்த முடிவு செய்தார். சமூக ஊடகங்களைத் தணிக்கை செய்ய ரணில் சட்டமூலத்தைக் கொண்டுவந்தபோது, தாராளவாதிகள் அதனைக் கண்டுகொள்ளவே இல்லை. இந்த சமூக ஊடக தணிக்கைச் சட்டமூலத்தை மஹிந்தவோ அல்லது கோத்தாவோ கொண்டு வந்திருந்தால் தாராளவாதிகள் பிசாசு நாட்டியமாடியிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ரணிலை ஜனாதிபதியாக்கியதன் மூலம், ராஜபக்சக்களை ஜனநாயக விரோதிகள், ஊடக அடக்குமுறையாளர்கள், குண்டர்கள் என முத்திரை குத்திய தாராளவாதிகளால் ரணில் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தபோது அவரைக் கண்டிக்க முடியவில்லை. பல்கலைக்கழகங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ரணிலுக்கு எதிராகத் தங்களது போராட்டத்தைக் கைவிட்டன. அந்தத் தாராளவாதிகள் வேலைநிறுத்தங்களை நசுக்கினர் மற்றும் தொழிற்சங்கங்களின் முதுகுகளை உடைத்தனர். இலவச இலக்கியத்துக்காக கருத்து தெரிவித்தவர்களை கைது செய்தனர். இறுதியாக, சமூக ஊடகங்களும் தணிக்கை செய்யப்பட்டன.

இப்போது ஒரு ராஜபக்சே ஆட்சிக்கு வந்தால், அவர் விரும்பியபடி விளையாட களம் காணப்பட்டுகின்றது. தாராளவாதிகள் களம் இறங்கிவிட்டனர்.

(5ஆம் பக்கம் பார்க்க...)

# தகவல் அறியும் உரிமை சட்டத்துக்கு புதிய செயலி



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய செயலி ஒன்று திங்கட் கிழமை அறிமுகப்படுத்தப்பட்டது.

அனைத்து தரப்பினருக்கும் தேவை-யான தகவல்களை இலகுவாகவும், விரைவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடிய-வகையில் வடிவமைக்கப்பட்ட குறித்த செயலி கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அவரனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

மாவட்ட செயலக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப கிளையின் ஒழுங்குபடுத்தலில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனின் வழிகாட்டலில், மாவட்ட விதாதா உத்தியோகத்தர் த.முரளிதரனால் குறித்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களங்களின் மாவட்ட இணைப்பாளர்களுடனான கலந்துரையாடலின் நிறைவில் குறித்த புதிய செயலி இவ்வாறு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதனூடாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்துடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்த புதிய செயலியின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள், திணைக்களங்களின் மாவட்ட இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (05)

# சனத் நிஷாந்தவின் கனவு நனவானது!

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படிப் பார்த்தால் சனத் நிராந்த வெற்றி பெறுகிறார். தன்னைத் தாக்கிய தாராளவாதிகள் தன்னைத் தாக்கும் சமூக வலைதளங்களுக்குக் கட்டிப் போடும் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று விரும்பியவர் அவர். அதன் மூலம் தாராளவாதி கள்தான் இறந்தார்கள், சனத் நிராந்த அல்ல. இந்த தாராளவாதிகள் இப்போது பிணங்களை வேட்டையாடுகிறார்கள்.

நாட்டில் சனத் நிராந்த பற்றிய பேச்சு அடிபடுவதற்கு முன்னர், புத்தளத்தில் ராஜபக்சக்களின் பாதுகாவலராக இருந்தவர் டி.எம். தசநாயக்க. அவர் சந்திரிகாவின் அரசில் உறுப்பினராக இருந்த போதிலும், மஹிந்த ராஜபக்சவே அவரை வளர்த்தார். 1999 வடமேற்கு மாகாண சபைத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் வாக்குக் கொள்ளையை முன்னின்று நடத்தியவர் தசநாயக்க.

காட்டில் மரங்களை வெட்டி புத்தளத்தின் சுற்றுச்சூழலை அழித்தார் என்று அவர் மீது ஒன்றுக்கு மேற்பட்ட முறை குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால் அவர் ராஜபக்சவுக்குப் பிடித்தமானவராக இருந்தார். புத்தளத்தில் எதிர்க்கட்சி அரசியல்வாதி களை பயமுறுத்தி, குண்டர் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்தார்.

2002ஆம் ஆண்டு ரணிலின் ஆட்சிக்காலத்தில் அவர் சிறையில் இருந்தார். இறுதியாக, அவர் விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுகளால் கொல்லப்பட்டார்.

புத்தளத்தில் தசநாயக்கவின் வெற்றிடத்தை நிரப்ப சனத் நிராந்தவை மஹிந்த வளர்த்தார். சனத் நிஷாந்த மகிந்த மற்றும் ராஜபக்ச குடும்பத்திற்கு தசநாயக்கவைவிட அதிகமாக சேவையாற்றினார். தசநாயக்கவின் முடிவு சோகம். ஆனால் சனத்தின் முடிவு சோகம் அல்ல. சனத் நிராந்தவின் பயணம் வெற்றியிலேயே முடிந்தது.

சமூக ஊடகங்களுக்கு எதிரான போரில் அவர் வெற்றி பெறுகிறார். ஐதேகவிலிருந்து அவரைத் தாக்கியவர்கள் அவரது முடிவுக்கு மிகுந்த வருத்தத்தை வெளிப்படுத்தினர்.

மகிந்தவைப் பாதுகாப்பதற்காக நிராந்த தனது சட்டைப் பையில் இருந்து துப்பாக்கியை எடுத்தபோது தாராளவாதிகளின் சமூக ஊடகங்கள் சிக்கலில் சிக்கின. நிராந்த ரணிலுக்காக அவரது தாராளவாதி கள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தியபோதும் அவர் இப்போது அவர்களுக்கு "நண்பன்"தான்.

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தாய்லாந்து பிரதமர் இலங்கைக்கு வருகை

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின்அழைப்பின் பேரில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி நாட்டிற்கு வருகை தரவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெறும் விழாவில் அதிதியாகத் தாய்லாந்து பிரதமர் பங்கேற்கவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, தாய்லாந்து பிரதமர், ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை மேற்கொள்வதுடன், வரலாற்று சிறப்புமிக்க இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (05)



# ஜேர்மன் நாட்டவரின் கைப்பையை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது

## திருநெல்வேலிச் சந்தையில் நடந்த சம்பவம்

ஜேர்மன் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பெண்ணொருவரின் கைப்பையை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சங்கானையைச் சேர்ந்த 28 வயது பெண் மற்றும் 21வயது ஆண் சகோதரர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருநெல்வேலி சந்தையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வந்த வெளிநாட்டு பெண்ணின் கடவுச்சீட்டு உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள், 500 யூரோ, 20,000 ரூபா அடங்கிய கைப்பையே கைக்குழந்தையுடன் வந்த பெண்ணொருவரால் நூதனமான முறையில் அபகரிக்கப்பட்டது.

திருட்டுச்சம்பவம்தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வெளிநாட்டவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.



கண்காணிப்பு கமராவின் உதவியுடன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினர் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

சந்தேக நபர்களும் திருடப்பட்ட பொருள்களும் மேலதிக நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. (05)

# சிசு இறப்பு காரணமாகப் பெற்றோரை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை

குருணாகல் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த 11 நாள்களே ஆன ஆண் சிசுவின் பெற்றோரை கைது செய்ய குருணாகல் நீதிவான் நீதிமன்றம் குருணாகல் பொலிஸாருக்கு உத்தரவிடுள்ளது .

குறித்தசிசுதீவிரசிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்ததாக குருணாகல் பொலிஸார் தெரிவித்தனர் .

குருணாகல் போதனா வைத்தியசாலையில் குழந்தையின் பிரேத பரிசோதனையை மேற்கொண்டதன் பின்னர் குருணாகல் நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது .

குறைப்பிரசவத்தில்குழந்தையைப் பெற்றெடுத்ததாய், குழந்தையைதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துவிட்டு யாரிடமும் கூறாமல் சில நாள்களுக்கு முன் மருத்துவமனையை விட்டுச் வெளியேறியுள்ளார்.

இதனையடுத்து உயிரிழந்த சிசுவின் அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக பெற்றோரைக் கண்டுபிடித்து அவர்கள் தொடர்பான இரத்த மாதிரியை பரிசோதனை செய்யுமாறு குருணாகல் நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளது. குழந்தையின் பெற்றோர் நாட்டை விட்டு தப்பிச் செல்லக்கூடும் என்பதால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு இந்த விடயம் குறித்து அறிவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

பொல்கஹவெல கொடவெல பிரதேசத்தில் வசிக்கும் இளம் தம்பதியரே இந்த சிசுவின் பெற்றோர் என சந்தேகிக்கப்படுவதாகவும், இந்த இளம் யுவதியே குழந்தையை பிரசவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர் .

அவர்கள் வைத்தியசாலைக்கு வழங்கிய முகவரி போலியானது என பொலிஸாருக்கு சந்தேகம் எழுந்ததன் காரணமாக அவர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை குருணாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது . (05)

# மகன் வேட்டையாடியதில் தந்தை பரிதாபமாகச் சாவு

கேகாலை தெடிகம பிரதேசத்தில் மகனொருவர் வன விலங்கை வேட்டையாடும் நோக்கில் பிரயோகித்த துப்பாக்கி சூட்டில் தந்தை உயிரிழந்துள்ளார்.

47 வயதுடைய தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் போது குறித்த பிரதேசத்தில் உள்ள மலைப்பகுதிக்கு தந்தையும் மகனும் வன விலங்குகளை வேட்டையாட சென்றுள்ளனர்.

இந்நிலையில் மகனால் வன விலங்குகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் தந்தை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து உயிரிழந்தவரது 17 வயது மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெடிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## சமஷ்டித் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தருகிறோம், 13 வது திருத்தச்சட்டத்தைதருகிறோம்என்றுநாம் வடக்குமக்களைஅழைக்கக்கூடாது. பேரிடரில்இருந்துமீளநாம்ஒன்றாக இணைந்துபோராடுவோம்என்றே அழைக்க வேண்டும்.

இந்திய ஆட்சியாளர்கள் தேசிய ஒற்று மையை ஏற்படுத்தி முழு நாட்டினரையும் ஒன்றாக இணைக்கும் வரலாற்றை எழுதும்போது, இலங்கைமக்களுக்கு மோதலான வரலாறு குறித்து எழுத நேரிட்டுள்ளது.

குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்து மலையக மக்களை நாடற்றவர்களாக மாற்றியபோது, செல்வநாயகம் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்க முன்வந்தார்.

1956ஆம்ஆண்டுமுதல்மொழிப் பிரச்சினை ஏற்படுத்தியதன் மூலம் 58 ஆம் ஆண்டு சிங்கள, தமிழ் கலவரம்ஏற்பட்டது. வடக்கு,கிழக்கில் ஸ்ரீ எழுத்தில் கிறீஸ் எண்ணெய் பூசும் நிலைமை உருவானது.

1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் வடக்கில் ஆயுதம் தாங்கிய அமைப்புகள் தொடங்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது - என்றார்.

## இது ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விட்டனர். இது கோழைத்தனமான ஆட்சி. முதுகெலும்பு இல்லாத ஆட்சியாளர்கள்.

ரணில் - ராஜபக்ச ஆட்சியாளர்களின் சில கைபொம்மைகள் இன்று காலை நீதிமன்றம் சென்று சில பிரதேசங்களுக்குள் எமது பேரணி நுழைவதற்கான தடையுத்தரவுகளைக் கோரினர். ஆனால் நாங்கள் பேரணியாகச் சென்றது சட்டத்தை மீறியல்ல. தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட இடங்களுக்குள் நாம் பேரணி நடத்தவில்லை. நாங்கள் சட்டத்தை மீறவில்லை.

இவ்விடத்தில் ஒன்று திரண்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் அடிப்படை உரிமைகளை, மனித உரிமைகளை, வேண்டுமேன்றே மீறுகின்றனர். ரணிலுக்கும் மஹிந்தவிற்கும் முதுகெலும்பு இருந்தால்மக்கள்மத்தியில்வருமாறு சவால் விடுக்கிறோம்.

ரணில் - -ராஜபக்ச ஆட்சியாளர்கள் கண்ணீர் புகையைக் கொண்டு இன்று எம் மீது தாக்குதல் நடத்தினர். இதுதான் அரச பயங்கரவாத்தின்அடையாளமாகும். அடக்குமுறை, மிலேச்சத்தனம் மூலம் ஆட்சியாளர்கள் மக்களை அதல பாதாளத்தில் தள்ளியுள்ளது. ஆனால்நாங்கள்தேர்தல்ஊடாகநாம் இவர்களுக்குப் பாடம் புகட்டுவோம்.

இன்று நடத்தப்பட்ட தாக்குதல் சட்டவிரோதமானது. போராடுவதற்கு அரசமைப்பின் ஊடாக எமக்கு உரிமைஉள்ளது. வெட்கம்! வெட்கம்! ரணில் - ராஜபக்ச ஆட்சியாளர்களே ஒரு வெட்கேடு.

இந்த மோசமான ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்ப 220 இலட்சம் மக்களும் தயாராக வேண்டும். நாங்கள் ரணிலுடனோராஜபக்சவுடனோ'டீல்' பேசவில்லை. மேடையில் எதிராகப் பேசிவிட்டு இரவில் 'டீல்' போடும் இரட்டை நிலைப்பாட்டையுடைய அணியல்ல ஐக்கிய மக்கள் சக்தி.

நாட்டை வங்குரோத்தடையச் செய்த கும்பலை எமது ஆட்சியில் சட்டத்தின் முன் கொண்டுவந்து நீதிமன்றத்தின் ஊடாக 220 இலட்சம் மக்களுக்கும் நீதியைப் பெற்றுத் தருவோம். அத்துடன் ஜனாதிபதி மாளிகை உட்பட அனைத்து மாளிகைகளையும் தகவல் தொழில்நுட்ப பல்கலைகழகமாக மாற்றுவோம்.

தற்போதைய மிக மோசமான ஆட்சியை விரட்டியடிக்கும் இந்தத் தொடக்கப் பயணத்தில் இணைந்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் மீது தாக்குதல் மேற்கொண்ட தந்தை, மகன் கைது

அனுராதபுரம்பிரதேசத்தில்உள்ளவீடொன்றிற்கு சோதனையிடச்சென்றவனஜீவராசிகள்திணைக்கள அதிகாரிகளை கூரிய ஆயுதங்களால் தாக்கிய தந்தை மற்றும் மகன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய தந்தையும் 24 வயதுடைய மகனுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மான் இறைச்சிகள் இருப்பதாக மொரகொட பிரதேச வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர்கள் குறித்த வீட்டிற்கு சோதனைக்காக சென்ற அதிகாரிகளிடம் அவர்களது கடமைகளை நிறைவேற்ற விடாமல் அவர்களைத் தாக்கியுள்ளனர்.

காயமடைந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இது தொடர்பில் தொலைபேசி ஊடாக பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

இதனையடுத்துவிசாரணைகளைமேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர்களை அவர்களது வீட்டில் உள்ளகட்டிலுக்குஅடியில்மறைத்துவைக்கப்பட்டிருந்த மான் இறைச்சியுடன் கைது செய்துள்ளனர். (05)

# ஹொரணைக் குளத்தில் சிப்பாயின் சடலம் மீட்பு

களுத்துறை - ஹொரணை பகுதியில் உள்ள சிறிய குளத்திலிருந்து இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலம் திங்கட்கிழமை அங்குருவத்தோட்ட பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அத்திலிவெள பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இராணுவ சிப்பாய் கடந்த ஞாயிற்றுக்கிழமை உடற்பயிற்சியின்போதுகலந்துகொள்ளவில்லை எனவும் தேடப்பட்ட போதும் அவர் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர் .

இந்த விடயம் தொடர்பில் இராணுவ சிப்பாயின் வீட்டாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது . (05)

# சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்துவோருக்கு பொதுமன்னிப்பு இல்லை

சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சந்தேக நபர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் ஏனைய சிறைக்கைதிகளுக்கு இனி பொதுமன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

ஒன்பது சிறைகளில் புனர்வாழ்வுப் பிரிவுகள் இயங்கி வருவதுடன் போதைப்பொருள் கடத்தல் காரர்கள் சிறைகளில் தங்கியிருந்து பல்வேறு தொழில்களை செய்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

இதன் காரணமாகவே போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# சாந்தனின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அவரை குடும்பத்துடன் இணைக்க நடவடிக்கைகளை எடுக்குக

## இந்திய, இலங்கை அரசுகளிடம் தமிழ்தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை



சாந்தனின் உடல் நிலையை கருத்தில்கொண்டும் இந்த அவசர சூழ்நிலையை கருத்தில் கொண்டும் இந்திய அரசும் மத்திய அரசும் தமிழக அரசும் இலங்கை அரசும் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என தமிழ்தேசிய மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணிஅறிக்கையொன்றில் தெரிவித்துள்ளவை வருமாறு -

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நீண்டகாலமாக சிறைத்தண்டனை அனுபவித்தவர்கள் இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டபோதும் அவர்கள் சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டு சிறைக்கைதிகள்போலதமதுவாழ்வை அனுபவித்து வருகின்றார்கள். இவர்களில்இலங்கையைசேர்ந்தவர்கள் தாங்கள் இலங்கைக்கு சென்று குடும்பத்தவர்களுடன் இணைந்து வாழகோரிக்கைவிடுத்துள்ளபோதிலும் இன்றுவரைஅவர்களின்கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில் சாந்தன் குடும்பத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மூன்றாம் திகதி இந்திய துணைத்தூதுவரை சந்தித்து இந்திய உயர்நீதிமன்றத்தால் விடுதலைசெய்யப்பட்டவர்கள் தங்கள் குடும்பத்துடன் இணைந்துவாழவழிசெய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்தநிலையில்சுகவீனம்காரணமாக சாந்தனின் உடல்நிலை மோசமடைந்துள்ளமைஅனைத்துதமிழ்மக்கள் மத்தியிலும் பாரிய அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சாந்தனின் உடல் நிலையைக் கருத்தில்கொண்டும் இந்த அவசர சூழ்நிலையை கருத்தில் கொண்டும் இந்திய அரசும் மத்திய அரசும் தமிழக அரசும் இலங்கை அரசும் உடனடியாக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவரை ஆபத்தான நிலையிலிருந்து மீட்டெடுத்து இலங்கைக்கு மீளத்திரும்பி குடும்பத்தினருடன் இணைந்து வாழ்வதற்கு ஆவணம் செய்யவேண்டும் எனவும் குறித்த வழக்கோடு சம்பந்தப்பட்டு உச்சநீதிமன்றால் விடுவிக்கப்பட்ட இலங்கையை சேர்ந்த ஏனையவர்களும் தங்கள் குடும்பங்களோடு இணைந்து வாழ காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவசரமான வேண்டுகோளை விடுக்கின்றோம். - என்றுள்ளது. (05)

# கொக்கட்டிச்சோலை படுகொலைகளின் நினைவேந்தல் கிழக்குப் பல்கலையில்







மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் 28.01.1987 ஆம் ஆண்டு சுட்டு படுகொலை செய்யப்பட்ட 83 அப்பாவி தமிழ் உறவுகளின் நினைவேந்தல் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் பொங்கு தமிழ்த் தூபியில் முன்பாக ஈகைச்சுடரேற்றி முன்னெடுக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைகழகத்தின் அனைத்துப் பீட தமிழ் மாணவர்களால் குறித்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஜனாதிபதி உள்ளிட்டவர்களின் சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க காலக்கெடு

ஜனாதிபதிமற்றும்பிரதமர்உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளின் சொத்து விவரங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இலஞ்சஊழல்குற்றச்சாட்டுவிசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், அரசஉத்தியோகத்தர்கள், ஊடகப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு உயர்மட்ட நபர்களின் சொத்து விவரங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவை நிர்ணயித்துஇலஞ்சஊழல்குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு கடுமையான உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதிமற்றும்பிரதமர் தலைமையிலான அரசியல்வாதிகள் மற்றும் அரச சேவையில் உள்ள ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் அரச உத்தியோகத்தர்கள் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவிடம் சொத்துக் கடன் அறிக்கைகளைப் பெறுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

மேலும், ஊடகப் பிரதானிகளும் இதில் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு சட்டத்தின் பிரகாரம் இந்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# காட்டுப்பன்றி இறைச்சியுடன் உணவக உரிமையாளர் கைது

## புத்தளத்தில் சம்பவம்

புத்தளம் பிரதேசத்தில் 20 கிலோ காட்டு பன்றி இறைச்சியுடன் உணவகம் ஒன்றின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் புத்தளம் , மதுரங்குளி பிரதேசத்தை சேர்ந்த 34 வயதுடையவராவார்.

இலங்கைவிமானப்படைஅதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால்மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடத்திலிருந்து 20 கிலோ நிறையுடைய காட்டு பன்றி இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தனது உணவகத்திற்கு மதுபானம் அருந்த வருபவர்களுக்காக காட்டு பன்றி இறைச்சி மற்றும் ஏனைய காட்டு விலங்குகளின் இறைச்சிகளை மறைத்து வைத்து பரிமாறி வந்துள்ளதாக விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

(05)

# புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் அரசியல் இயக்கமே அவசியம்

## என்கிறார் அநுர குமார



வெறுமனே ஆட்சி மாற்றத்தால் எந்தவிதமான பயனும் கிடையாதென்பதும், இந்த நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகம்ஆகியஅனைத்துப்பிரிவுகளையும்ஒரே பிடியில்எடுத்துமாற்றத்திற்குஇலக்காக்குகின்ற புதிய அரசியல் இயக்கமொன்று அவசியமெனவும்தேசியமக்கள்சக்தியின்தலைவர் அநுர குமார திசாநாயக்க கூறினார்.

கடந்த 27 ஆந் திகதி மாத்தறையில் நடத்தப்பட்ட மேற்படிமாவட்டத்தின் அதிட்டன (திடசங்கற்பம்) முப்படைக் கூட்டமைவின் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த மாநாட்டில் அநுரகுமார தெரிவித்த கருத்துக்கள் வருமாறு -

அரசியல் சூடுபிடித்துள்ளது. தேர்தல் அண்மித்திராத நிலையில் அரசியல் இவ்விதமாக சூடுபிடித்தமை இலங்கையில் ஒருபோதுமே நிலவவில்லை. அண்மைக்காலமாக இலங்கை மக்கள் அரசியல் ரீதியாக மிகவும் அதிகமாக விழிப்படைந்து வருகிறார்கள். விழிப்புணர்வடைந்த அரசியல் முனைப்புநிலையை அடைந்துவருகிறார்கள்.

இந்த வருடத்தின் ஒக்ரோபர் மாதம் இறுதியளவில் எமது நாட்டில் இருப்பது புதிய அரசாங்கமாகும், புதிய ஆட்சியாகும். அந்த புதிய அரசாங்கத்தை, புதிய ஆட்சியை தேசிய மக்கள் சக்தியினுடையதாக மாற்றிக்கொள்ள நாமனைவரும் முனைப்பாகப் பங்களித்துள்ளோம்.

எமது நாடு பயங்கரமான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தவேளையில் தமது உயிர் உள்ளிட்ட அனைத்தையுமேஅர்ப்பணித்துயுத்த முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டுவந்தாலும் அன்று நீங்கள் எதிர்பார்த்த சாதகமான நாடொன்றில் நன்றாக வசிக்கின்ற மக்கள் பற்றிய எதிர்பார்ப்பு முழுமையகவே சிதைக்கப்பட்டுவிட்டது.

யுத்தம் நிலவிய காலத்தைப் பார்க் கிலும் சீர்குலைந்த, உயிர்வாழ்வது மிகவும் கடினமான மற்றும் உலகின் முன்னிலையில் அபகீர்த்திக்குள்ளான நாடாக விளங்குகின்றது. அந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவேண்டியது எம்மால் கைவிடமுடியாத பொறுப்பாகும்.

இந்த நெருக்கடிகளை மட்டுப்படுத்தப்பட்ட ஒருசில விடயங்களுக்குள் முடக்கிவிட ஒருசிலர் எதிர்பார்க்கிறார்கள். பொருளாதாரரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளமை உண்மைதான்.

மக்களின் அத்தியாவசிய பண்டங்கள்மீது வரிவிதிக்கப்படுவது, தொழிலொன்றைத் தேடிக்கொள்ள இயலாது, கிடைக்கின்ற சம்பளத்தில் சீவிப்பது சிரமமானது. நாட்டைவிட்டுச் செல்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம், பொருளாதாரரீதியாக வங்குரோத்துநிலையடைந்து உள்ளதென்பது போன்றவிடயங்கள் உண்மையே. எனினும் மறுபுறத்தில் சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்து, குற்றச்செயல்கள் மலிந்துள்ளன.

அண்மையில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில்இருந்துவெலிகமபொலீஸ்ஆளுகைப் பிரிவுக்கு வருகை தந்த ஒரு குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தர்கள். அவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் மீது வெலிகம பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். ஒரு பொலீஸ் உத்தியோகத்தர் இறந்து மற்றுமொருவர் கவலைக்கிடமான நிலையில் இருக்கிறார்.

இறுதியில் கொழும்பு பொலீஸாரும் வெலிகம பொலீஸாரும் ஒருவர்மீது ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டார்கள். வழிப்பறிக்கொள்ளைக்காரன்போல் வீதியில் வாகனத்தை நிறுத்துமாறு கூறிய வேளையில் நிறுத்தாமையால் நாரம்மல சாரதியை சுட்டுக்கொன்றார்கள். மதியபோசனம் உண்டுகொண்டிருந்த பிக்குவை சுட்டுக்கொன்றார்கள். பெலியத்தையில் ஐவரைக் கொலைசெய்தவர்கள் யாரென இன்னமும் தெரியாது.

அனைவரதும் உயிர்கள் பாதுகாப்பற்ற அராஜகநிலை உருவாகி உள்ளது. 1993 காலத்திலும் இவ்வாறான நிலைமை காணப்பட்டு ஜனாதிபதி பிரேமதாஸவின் படுகொலைக்குப் பின்னர் சற்று தணிந்தது. உங்களதும் எனதும் எம்மனைவரதும் உயிர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. பொருளாதாரம் சீரழிந்தது மாத்திரமல்ல மக்களின் உயிர்கள் பற்றிய பாதுகாப்பற்ற நிலைமையின்பேரில் ஆட்சிக்குவர சிலவேளைகளில் திட்டமிடுவதாகவும் இருக்கக்கூடும். இது அதிகாரத்திற்காக உயிர்த்தஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட ஒரு நாடு என்பதை மறந்துவிடலாகாது. எந்தவொரு பிரஜைக்கும் அரசாங்க அலுவலகமொன்றில் இருந்து பணிகளை மேற்கொள்ளமுடியாத சீரழிந்த அரச சேவையே காணப்படுகின்றது.

பொலீஸ் மா அதிபரொருவரை நியமித்துக் கொள்ளமுடியாமல்பதிற்கடமையாற்றுவதற்காக நியமித்தவருக்கு கரட், கிழங்கினைக் காட்டிக்காட்டி தமக்குத் தேவையாக நடவடிக்கைகளை ஈடேற்றிக்கொள்கிறார்கள். நீதி பரிபாலனம் தொடர்பில் சந்தேகம் குவிந்துள்ளது. குற்றச்செயல் புரிபவர்கள், மோசடிப் பேர்வழிகள், ஊழல்பேர்வழிகள் ஒன்றுசேர்ந்த குடும்பங்களின் அருவருப்பான, அழுகிப்போன அரசியலே நிலவுகின்றது.

இரும்பு மூடைக்கே கரையான் அரித்துவிட்டால் ஏனையவை பற்றிப் பேசுவதில் பிரயோசனமில்லை. உலகின் ஒருசில நாடுகளில் பொருளாதாரம் சீரழிந்தாலும் ஏனைய முறைமைகள் வழமைபோல் நிலவும்.

எமது நாட்டில் சீரழிந்த இந்த முறைமைக்குப் பதிலாக புதிய முறைமையொன்றை நிலைநாட்டுவதை விடுத்து ஆட்சிமாற்றம் அல்லது தலைமைத்துவ மாற்றம் பயன்தர மாட்டாது. மனிதர்கள் சிந்திக்கின்றவிதத்தைக் கூட மாற்றியமைக்கத்தக்க முறைமையொன்று தேவை.

இந்த சமூகத்துடன் எம்மால் முன்நோக்கி நகர முடியாது. பொருளாதாரம், அரசியல், சமூகம் அனைத்தையுமே புதிய மாற்றத்திற்கு இலக்காக்குகின்ற அரசியலொன்று தேவை. அண்மைக்காலமாக பலவாய்ப்புகள் உருவாகியபோதிலும் நாட்டை மேம்படுத்துகின்ற நோக்கு ஆட்சியாளர்களிடம் இருக்கவில்லை. மேலைத்தேய ஆதிக்கத்திற்கு 133 வருடங்கள் அகப்பட்டிருந்த ஒரு நாடு சுதேசிகளின் கைகளுக்கு கிடைத்ததும் வெள்ளைக்காரனுக்கு இரண்டாம்பட்சமாகாத அளவுக்கு நாட்டைக் கட்டியெழுப்ப எந்தளவு ஆழமான உணர்வு ஏற்படவேண்டும்? எம்மிடம் உருவாகாத இந்த நோக்கு இந்தியாவின் காந்தி, நேரு, பட்டேல், சுபாஷ் சந்திர போஸ் போன்ற தேசிய இயக்கைச்சேர்ந்த தலைவர்களிடம் இருந்தது.

இந்த நோக்கு இன்று சந்திரனுக்குப் போகின்ற ஓர் இந்தியாவை உருவாக்கி இருக்கின்றது. தாழ்ந்தசாதியைச்சேர்ந்தவர்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஒரு பெண் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இந்தியர் எனும் கொடியின்கீழ் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட்டார்கள்.

குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து மலையக மக்களை நாடற்ற நிலைமைக்கு மாற்றியதும் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்க செல்வநாயகம் முன்வந்தார். 1956 இல் இருந்து மொழிப் பிரச்சினையொன்றை இழுத்துப்போட்டுக் கொண்டதால் 58 அளவில் சிங்கள - தமிழ் கலவரம் உருவாகியது.

ஸ்ரீ எழுத்தில் கறுப்பெண்ணெய் பூசத் தொடங்கினார்கள். 1970 நடுப்பகுதியில் வடக்கில் ஆயுத இயக்கமொன்று உருவாகின்றது. 2009 இல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் 2019 இல் உயிர்த்தஞாயிறு தாக்குதல் இடம்பெறுகின்றது.

எமது ஆட்சியாளர்கள் உருவாக்கியது முரண்பாட்டு வரலாறாக அமைந்தபோதிலும் இந்திய ஆட்சியாளர்கள் உருவாக்கியதோ ஒருமைப்பாட்டினையாகும். தேசம் ஒன்றாக எழுச்சிபெறுகின்ற வரலாற்றினை அவர்கள் எழுதும்போது முரண்பாடுநிறைந்த வரலாற்றினை எழுதவேண்டியநிலை எமக்கு ஏற்படுகின்றது.

உலக நாடுகள் இருபதாம் நூற்றாண்டில் பிரமாண்டமான முன்னேற்றத்தை நோக்கிப் பயணிக்கையில் நாங்கள் அந்த நூற்றாண்டினைக் கைவிட்டுவிடுகிறோம். உலகில் உருவாகியுள்ள நவீனத்துவத்திற்கு ஒத்திசைவு செய்யத்தக்க இலங்கையொன்று எமக்குத் தேவை.

எனவே எம்மெதிரில் இருப்பது வெறுமனே ஆட்சிமாற்றத்திற்குப் பதிலாக புதிய மாற்றத்திற்கான யுகத்தை நோக்கி நாட்டைக்கொண்டுசெல்கின்ற புதிய ஆட்சியாகும். அதற்காக நாட்டை மீண்டும் விழித்தெழச் செய்வித்து தேசத்தை ஒருமைப்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும்.

நாங்கள் வடக்கு மக்களை அழைக்க வேண்டியது 13 ஐ தருகிறோம் என்றல்ல் பெடரல் தருகிறோம் என்றல்ல. இந்த அனர்த்தத்தில் இருந்து விடுபடுவதற்காக நாங்கள் ஒன்றுசேர்ந்து போராடுவோம் என்றே கூறவேண்டும். கப்பம் கொடுத்து வாக்குகளைப் பெறுகின்ற கலாசாரத்திற்குப் பதிலாக புதிய மறுமலர்ச்சி யுகத்துடன் ஒன்றுசேருங்கள் எனக்கூறி அதிகாரத்தின் சுக்கானை தேசிய மக்கள் சக்தியின் கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நாங்கள் அதிகாரத்தை எடுப்பதென்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆரம்பமேயன்றி இறுதிக்கட்டமல்ல. எமக்கு எதிராக ஒன்றுசேரக்கூடிய அனைத்துச் சக்திகளும் ஒரே மேடைக்கு வருகின்றன. திடீர் விபத்து காரணமாக ஒருவர் இறந்தாலும் என்பிபி ஐ பிடித்துக்கொள்கிறார்கள்.

அவர்கள் அந்த அளவுக்கு திகைப்படைந்துள்ளார்கள். அவர்களின் அசிங்கமான, காடைத்தனமான, கீழ்த்தரமான அரசியலை சதாகாலமும் முன்னெடுத்துச்செல்ல முடியுமென்று அவர்கள் நினைத்தார்கள். பல தசாப்தங்களாக அவர்களின் குற்றச்செயல்களையும், ஊழல்களையும் வெளியில் வர இடமளிக்காமல் பிரதான ஊடகங்களில் தணிக்கை செய்திருந்தார்கள்.

இப்போது சமூகவலைத்தலங்களை தடைசெய்யப்போகின்ற ஐயாமார்களுக்கு நாங்கள் கூறுவது ' இப்போது குதிரை தப்பியோடிவிட்டது, லாயத்தை மூடுவதில் பலனில்லை' என்றாகும். இப்போது அவதூறு, அவமதிப்பு, பயமுறுத்தல், அச்சுறுத்தல்களை முன்வைத்து வருகிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி கட்டியெழுப்பப்பட்டுள்ளது அவதூறு, அவமதிப்பு, பயமுறுத்தல், அச்சுறுத்தல்களுக்கு கட்டுப்படுவதற்காக அல்லவென்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம். பலதசாப்தங்களாக பெரிகோட்டின் இருபுறத்திலும்வைத்திருந்தபாதுகாப்புப்பிரிவின் இளைப்பாறியவர்களும் நாங்கள் அனைவரும் இந்த பக்கத்தில் ஒன்றுசேர்ந்திருக்கிறோம். பெரிகோட்டின் அந்தப் பக்கத்தில் அவர்கள் தனித்துப்போய் இருக்கிறார்கள்.

ஜெனரல்மார்கள், அட்மிஜரால்மார்கள், எயார் மார்ல்கள், மேஜர் ஜெனரல்கள், நாமனைவரும் ஒன்றுசேர்ந்து இப்படி ஒன்றாக இருந்தாலும் அவர்கள் சதாகாலமும் அவர்களின் பைக்குள்ளே அனைவரையும் வைத்துக்கொள்ளவே நினைத்தார்கள். இளைப்பாறிய முப்படையினர் கூட்டமைவினைக்கண்டு அச்சமடைந்தவர்கள் சிறுபிள்ளைத்தனமானவற்றை அமைத்திட முயற்சிசெய்கிறார்கள்.

ஆனால் நாங்கள் எப்போதுமே கூறுவதைப்போல் கொப்பி பண்ணமுடியும், ஆனால் இணையானதாக்கிட முடியாது. இந்த ஒவ்வொருவரும் மக்களுக்கு நல்ல வாழ்க்கை, நல்ல நாட்டை எதிர்பார்த்து வந்தவர்களேயன்றி அவர்களிடம் தனிப்பட்ட தேவைகள் கிடையாது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், உளவுத்துறைப் பிரதானி போன்றவர்கள் பதற்றமடைந்துள்ளார்கள். எனினும் நாங்கள் பதற்றமடையவில்லை.

தம்மை இந்த பேரழிவிலிருந்து விடுவித்துக்கொள்வார்கள் என்ற பாரிய எதிர்பார்ப்பு எம்மீது மக்களுக்கு இருகின்றது. கலவரமடைந்து, பொய்க்கிடங்குகளில் விழுந்து அந்த மக்களின் எதிர்பார்ப்பினை நாங்கள் சிதைக்கப்போவதில்லை.

புயலில் சிக்கியுள்ள இந்த படகினை மிகச்சிறந்த தந்திரோபாயத்தை தெரிவுசெய்து வெற்றியை நோக்கி வழிப்படுத்துவோம் என்பதை உறுதியாகக் கூறுகிறோம். நாங்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஒரு வார்த்தைகூட பிசகக்கூடாது. ஐ.தே.க தலைவர் சுதர்ன குணவர்தன 'சமபிம' என பாரிய லிபரலுக்காக தோற்றியவர்கள் அவற்றைப் பிடித்துக்கொண்டு அடிக்கிறார்கள்.

நடவடிக்கைகளை மேற்கொண்டதும் வெற்று ஆசாமிகள். அதனால் ஒருசொல்கூட பிசகுவதற்கு எமக்கு உரிமை கிடையாது. நாங்கள் எந்நேரத்திலும் மனதால் அல்லது மூளையால் முடிவுகளை எடுக்கவேண்டும். அதனால் நாங்கள் பொறுமையுடனும் கவனமாகவும் இந்த பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

அதற்காக அசிங்கமான, அழுகிப்போன, துர்நாற்றம்வீசுகின்றஅரசியலைசுத்தஞ்செய்ய வேண்டும். பொதுமக்களுக்கு ஒரு சட்டமும் அரசியல்வாதிகளுக்கு ஒரு சட்டமும் இருக்கின்ற நிலைமையை நாங்கள் மாற்றியமைத்திடவேண்டும். அனைத்து அதிகாரங்களும்ஒரேவளையத்தின்கைகளிலேயே இருக்கின்றன. அவையனைத்தையும் மாற்றியமைத்து பொருளாதார ஜனநாயகத்தை நிலைநாட்டவேண்டும். எமது கல்வியை பாரிய மாற்றத்திற்கு இலக்காக்கிட வேண்டும். ஒவ்வொரு பிரஜைக்கும் உணவுவேளையொன்றை வழங்குவதற்கான வழிமுறையை உறுதிப் படுத்திட வேண்டும். நாங்கள் தொடக்கத்திலேயே பிரஜைகளுக்கு உணவு, சுகாதாரம், கல்விக்கு உத்தரவாதம் அளிப்போம்.

நெருக்கடியைமுகாமைசெய்வதற்காகவே சர்வதேச நாணய நிதியம் இடையீடு செய்துள்ளது. எமது ஆட்சியின்கீழ் நெருக்கடியை முகாமைசெய்து மீண்டும் இவ்வாறான நிலைமை ஏற்படாதிருக்க புதிய அணுகுமுறைக்குள் நாட்டைக் கொண்டு செல்வோம். குற்றச்செயல்களிலிருந்தும் போதைப்பொருள்களிலிருந்தும் இந்த நாட்டை மீட்டுப்பதற்கான திட்டம் எம்மிடம் இருக்கின்றது.

ஊர்களில் இருந்தவர்களை அரசியல்வாதிகளின் குற்றச்செயல்களுக்கு ஈடுபடுத்தி எமது நாட்டின் பாதாளக்கோஷ்டியை பாரியளவில் வளர்த்தெடுத்தார்கள். ஜே.ஆர். ஜயவர்தன கோனவல சுனிலுக்கு மன்னிப்பு வழங்கினார். ஆர். பிரேமதாச சொத்தி உபாலியை நிறைவேற்றுச் சபைக்கு எடுத்தார். சந்திரிக்கா குமாரதுங்க பெத்தெகான சஞ்சீவவை தனது பாதுகாப்பு பிரதானியாக நியமித்துக்கொண்டார். நாமல் ராஜபக்ஷவிற்கு பாதுகாப்பு வழங்குபவர் ஜூலம்பிட்டிய அமரே. இந்த ஆட்சியாளர்களுக்கு பாதுகாப்புப் பிரிவுகளின் ஜெனரல்மார்களின் பாதுகாப்பு போதாதென பாதாளக்கோஷ்டியிடம் ஒப்படைத்தார்கள். இந்த நிலைமையை மாற்றியமைத்திட புதிய எழுச்சி, ஒருமைப்பாடு, புதிய மலர்ச்சி எமது நாட்டுக்கு அவசியமாகும். அந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் பாரிய செயற்பொறுப்பு இளைப்பாறிய முப்படையினர் கூட்டமைவிடம் கையளிக்கப்படுகின்றது. அதனை சிறப்பாக ஈடேற்றுவீர்கள் என்பது எம்மனைவருக்கும் உறுதியானதே. - என்றார். (05)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

# பொருளாதார பயங்கரவாதிகள் ராஜபக்சக்களிடமிருந்து நாட்டை விடுவிக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்

## சஜித் பிரேமதாஸ அழைப்பு



நாட்டு மக்கள் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். தேசப்பற்றின் பெயரால் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ குடும்பம் மக்களை கொள்ளையடித்து தன்னிச்சையாக நடந்து கொண்டதே இதற்கு காரணம். பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்த போதிலும்,ராஜபக்ஷர்கள் மற்றுமொரு பொருளாதார பயங்கரவாதத்தை ஆரம்பித்துள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நட்புவட்டாரசெல்வந்தர்களைபாதுகாக்கும், கூட்டாளிகளுக்கு சலுகைகளை வழங்கும் ராஜபக்ச பொருளாதார பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை விடுவித்து மக்களை இந்த நெருக்கடியில் இருந்து மீட்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஹேவாஹெட்ட நகரில் இடம்பெற்ற ஜன பௌர(மக்கள் அரண்) மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாற்றுத்தரப்பினர் எனக் கூறிக்கொள்ளும் குழு திருடர்களைப் பிடிக்க அதிகாரத்தைக் கேட்கின்றனர்.ஐக்கிய மக்கள் சக்தி அதிகாரம் இல்லாமலேயே திருடர்களைப் பிடித்தது.

நாட்டிற்கு மாற்று அணி என்று கூறும் சில குழுக்கள் ஆவணக் கோப்புகளைக் காட்டி திருடர்களைப் பிடிப்பதாகச் சொன்னாலும், நீதித்துறையின் ஊடாக நாட்டை வங்குரோத்தடையச்செய்த திருடர்கள் யார் என்பதை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே ஐக்கிய மக்கள் சக்தி வெளிக்கொணர்ந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ராஜபக்ச மொட்டு மாபியாவின் கைப்பாவையாகவே தற்போதைய ஜனாதிபதி செயலாற்றுகிறார்.

இந்நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களுக்கு எதிராக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து,விசாரணைகளை வெளிப் படைத்தன்மையுடன் நடத்தி,குற்றம் சாட்டப்பட்டவர்களது குடியியல் உரிமைகளை இல்லாதொழிக்காதது ஏன் என ஜனாதிபதியிடம் வினவிய போது அவர் அதனை நகைச்சுவையாக எடுத்துக் கொண்டார்.

ராஜபக்ச மொட்டு மாபியா மூலம் தற்போதைய ஜனாதிபதியை நியமித்தமையே இதற்கு காரணம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ராஜபக்ச மொட்டு மாபியாவைச் சேர்ந்த 134 பேர் தமது கைகளை உயர்த்தி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்துள்ளமையாலேயே நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்சர்களை பாதுகாத்து வருகிறார்.

இது தொடர்பில் வினவிய போது மொட்டு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பல தடைகளை ஏற்படுத்தினார்கள்.இந்தக் கேள்விகளுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று ஒரு கைப்பாவை ஜனாதிபதியே ஆட்சியில் இருக்கிறார்.இந்த கைப்பாவையின் அதிகாரங்கள் ராஜபக்சர்களின் கைகளிலேயே உள்ளன. இந்த திருடர்களுடன் ஜனாதிபதிக்கு டீல் இருந்த போதிலும், இவ்வாறான டீல் தன்னிடம் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் திருடர்களுக்கு பதில் சொல்ல வேண்டியது மக்களின் பொறுப்பாகும். நாட்டைவங்குரோத்தாக்கியதிருடர்களும், திருடர்களைப் பாதுகாக்கும் ஜனாதிபதியும் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவர். இவர்களுக்கு உரிய பதில்சொல்லவேண்டியது மக்களின் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (05)

# ஸ்ரீ சண்முகா இந்து மகளிரின் காணிப்பிரச்சினைக்கு தீர்வு

## கிழக்கு ஆளுநர் நடவடிக்கை

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி 100 வருட வரலாறு கொண்டது. அக்கல்லூரியில் நீண்டகாலமாக நிலவிவந்த காணி பிரச்சினைக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தீர்வை பெற்றுக்கொடுத்துள்ளார்.

ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கடந்த பத்து வருடங்களாக காணிப் பிரச்சினை நிலவி வருகிறது. இதுதொடர்பில் கடந்தகாலங்களில் பாடசாலை நிர்வாகம் பல தரப்பினரிடம் தீர்வைப் பெற்றுக்கொள்ள முற்பட்டுள்ள போதிலும் அது சாத்தியப்படவில்லை.

இந்நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இதற்கு 30 வருட குத்தகைக்கு புதிய காணியை பெற்றுக்கொடுத்துள்ளதுடன், 30 வருடத்துக்கான குத்தகை தொகையையும் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

கிழக்கு ஆளுநரின் இந்த செயற்பாட்டை வரவேற்றுள்ள பாடசாலை நிர்வாகம், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், அவருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பாடசாலைக்கு காணி வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்த பாடசாலையில் நீண்டகாலமாக காணிப்பிரசினை காணப்படுவதாகவும், அதற்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை எனவும், பாடசாலைகளுக்கான காணியை உடனடியாக பெற்றுத்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன் மற்றும் குகதாசன் ஆகியோர் எனது கவனத்திற்கு கொண்டுவந்ததுடன், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்களும் எனது கவனத்திற்கு கொண்டு வந்து இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

அதன் பின்னர் இவ்விடயம் குறித்து ஆராய்ந்து தீர்வை வழங்கினேன் என செந்தில் தொண்டமான் தனது உரையில் தெரிவித்துள்ளார். (05)

# 10 கிலோ மாட்டிறைச்சி, 20 மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 10 கிலோ மாட்டிறைச்சி மற்றும் 20 மதுபான போத்தல்களுடன் சந்தேகநபரான வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அல்லைப்பிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாடொன்று இறைச்சியாக்கப்படுவதாக ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்த போது, மாடொன்று இறைச்சியாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதனைத்தொடர்ந்து முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் அருகில் உள்ள வீட்டின் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார், குறித்த வீட்டில் சோதனை நடவடிக்கையை மேற் கொண்டனர். அதன் போது வீட்டினுள் இருந்து 20 மதுபான போத்தல்களையும் குளிர்சாதன பெட்டியில் இருந்து 10 கிலோ இறைச்சியையும் மீட்டதுடன், வீட்டின் உரிமையாளரையும் கைது செய்தனர்.

தமது வீட்டில் கொண்டாட்டம் ஒன்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்த நிலையில் , அதற்காகவே மதுபான போத்தல்களும் , இறைச்சியும் இருந்தது என வீட்டார் கூறிய போதிலும் , பொலிஸார் அதனை ஏற்காது குடும்பஸ்தரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். (05)

# 76ஆவது சுதந்திர தின ஒத்திகைக்காக விசேட போக்குவரத்து திட்டம் வருகிறது

2024 பெப்ரவரி 04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாட்டின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்விற்கான ஒத்திகையின் போது கொழும்பு நகரில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி , ஜனவரி மாதம் 30 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி வரை காலை 6.00 மணி முதல் 8.30 மணி வரையிலும், முற்பகல் 11.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும் , பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி முதல் மறுநாள் 04 ஆம் திகதி சுதந்திர தின நிகழ்வு முடிவடையும் வரை இந்த போக்குவரத்து திட்டம் அமுலில் இருக்கும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர் . (05)

# பெறாமகளை துஷ்பிரயோகம் செய்தவருக்கு நீதிமன்று 50 வருட கடூழிய சிறைத் தண்டனை

தனது சொந்த சகோதரனின் பத்து வயது மகளை கடுமையாக பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் கண்டி மேல் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட மூன்று தனித்தனி குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேக நபருக்கு ஐம்பது வருட கடூழிய சிறை தண்டனை வித்தித்து கண்டி மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

இதன்படி, இந்த விடயம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட தனிதனி குற்றச்சாட்டுகளின் முதல் மற்றும் இரண்டாவது குற்றச்சாட்டுகளுக்கு இருபது வருடங்களும், மூன்றாவது குற்றச்சாட்டிற்கு பத்து வருடமுமாக ஐம்பது வருட சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு பத்து லட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் , முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கு தனித்தனியாக பதினைந்தாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும், அதனை செலுத்த தவறினால் மேலும் ஆறு மாத சிறைத்தண்டனை விதித்தும் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது. (05)

# சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வில் போதைப்பொருளுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில், இடம்பெற்று வரும் சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வில் (கார்னிவேல்) போதைப்பொருள்களுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மைதானத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இரு இளைஞர்களை அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சோதனையிட்டனர்.

அதன் போது, அவர்களின் உடைமையில் இருந்து ஒரு தொகை கஞ்சாவை மீட்டுள்ளனர். அதனை அடுத்து அவர்களைக் கைது செய்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டார். எனினும் அவர் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு வேண்டிய ஆவணங்கள் எவையும் அவரிடம் இல்லை. இந்த நிலையில் அவரது உடல் நலம் பாதிகப்பட்டதன் காரணமாக அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரை உடனடியாக இலங்கைக்கு அழைத்துவரும்படி அவரது தாயாரும் உறவினர்களும் வலியுறுத்தியிருந் தனர்.

சாந்தனை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படிகேட்டுதமிழ்நாட்டுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரன் கடிதம் எழுதியிருந்தார். அதனைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பாக இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி மற்றும் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதுவர் மற்றும் னொழும்கில் உள்ள இந்தியத் தூதரவ அதிகாரி ஆகியோரிடம் தான் பேசினார் என்றும் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் சிறீதரன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு இந்தியாவிலுள்ள சிறப்பு முகாமில் தடுத்தது வைக்கப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு அழைத்து வரும் விடயம் தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியுடன் பேசினேன்.

சாந்தனை இலங்கை திரும்பி அழைத்து வருவதற்கு அயலுறவு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். சென்னையில் உள்ள துணைத் தூதரகத்தின் துணைத் தூதரான வெங்கடோடு இது தொடர்பில் பேசப்பட்டுள்ளது, அநேகமாக இரண்டு மூன்று நாட்களுக்குள் விடயங்கள் சரிவரும்,இந்திய அதிகாரிகளால் சில ஆவணங்கள் கேட்கப் பட்டுள்ளன,அந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுமிடத்தில் சாந்தன் நாடு திரும்புவது சாத்தியமாகும் என்றும் தெரிவித்தார்.

சென்னையில் உள்ள துணைத்தூதுவருடனும் நான் தொலைபேசியில் பேசினேன். பாதுகாப்பு அமைச்சின் சில உறுதிப்படுத்தலுக்காகத் தான் காத்திருக்கிறார் எனவும் உறுதிப்படுத்தல் கிடைத்தவுடன் சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்திய தூதரகத்தால் ஆவணங்கள் இலங்கை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் உரிய அனுமதி கிடைத்தவுடன் சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய அதிகாரி தெரிவித்ததார் - என்றார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**

kalaikkathirnews@gmail.com




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2024இல் வெளியிடப்பெற்றது.